## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் 2010

------------------------------------------------------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர்ந்தபட்ச தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்கேடுகளைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் நிலைவரம், அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு, காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதில் தாமதம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 49 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2011 ஏப்ரல் 20 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) I. நியம இலக்கம் 18 இன் 55 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு சொத்தை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்திலிருந்து பெறுமானத் தேய்விடல் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தின் பெறுமானத் தேய்வுக் கொள்கையின் பிரகாரம் சொத்து ஒன்று கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் பெறுமானத் தேய்வு செய்யப்படாததுடன் அகற்றப்படும் ஆண்டில் அகற்றப்படும் திகதி வரையும் பெறுமானத் தேய்வு செய்யப்படுவதாகக் காட்டப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நிறுவனத்தின் பெறுமானத் தேய்வுக் கொள்கையானது நியமத்துடன் இணங்கியிருக்கவில்லை.

II. சொத்து ஒன்று ரூபா 1.00 படியான தேறிய பெறுமதியில் கணக்குகளில் காட்டப்பட்ட 99 சொத்துக்களின் ஆயுள் காலத்தினை மீண்டும் கணித்து மீள் மதிப்பீடு செய்வதற்கோ அல்லது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத சொத்துக்கள் இருந்தால் அவற்றினை விற்றுத் தீர்ப்பதற்கோ மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 30 இன் பிரகாரம் நிறுவனத்தின் நிதி மற்றும் செயற்பாட்டுத் தீர்மானங்களுக்கு தாக்கம் விளைவிக்கக்கூடிய அனைத்து தொடர்புபட்ட தரப்பினர்களினதும் தொடர்புகள் அவர்கள் நிதி கொடுக்கல்வாங்கல்களில் தொடர்புபட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

---

திரையரங்கு கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கானது பேரேட்டின் பிரகாரம் ரூபா 161,826,268 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரம் ரூபா

166,736,441 ஆக இருந்ததனால் ரூபா 4,910,173 தொகையான விளக்கமளிக்காத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.24.1 பெறவேண்டிய கணக்குகள்**

**(அ) தயாரிப்புக் கடன்பட்டோர்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ரூபா 81 மில்லியன் தொகையான தயாரிப்புக் கடன்பட்டோரில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோரின் அளவு ரூபா 44 மில்லியன் அதாவது 54% ஆக இருந்தது. இப்பணத்தினை அறவீடு செய்வதற்காக போதிய நடவடிக்கை எடுத்தமைக்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தயாரிப்புக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் தயாரிப்புக் கடன்பட்டோர் வரவு மீதி ரூபா 80,461,888 பெறுமதிக்கு திரைப்பட வாடகைக் கடன்கொடுத்தோர் பட்டோலையில் ரூபா 13,602,867 தொகையான வரவு மீதியும் நானாவித கடன்பட்டோர் பட்டோலையிலுள்ள ரூபா 1,300,217 தொகையான செலவு மீதியும் செம்மையாக்கப்பட்டுக் காட்டப்பட்டிருந்தன.

தயாரிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ள கடன்தொகைக்காக அறவிடப்பட வேண்டிய வட்டி கடன்பட்டோருடன் சேர்த்துக் காட்டப்பட்டிருந்தது. அவ்வட்டியானது 100% பெற்றுக்கொள்ளமுடியாதவை என்ற அடிப்படையில் 50% மாத்திரம் வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மிகுதி 50% ஆன வட்டி ஒதுக்கக் கணக்கிற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டு அக்கணக்கின் செலவு மீதியான ரூபா 2,965,479 தொகை தயாரிப்புக் கடன்பட்டோரிலிருந்து கழிக்கப்பட்டு தேறிய கடன்பட்டோர் பெறுமதி ரூபா 92,399,492 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. மேலே கூறப்பட்ட விடயங்களின் பிரகாரம்

தயாரிப்பு கடன்பட்டோரின் சரியான பெறுமதி கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) திரையரங்கு கடன்பட்டோர்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2001 ஆம் ஆண்டில் திரையரங்குகளுக்கு திரைப்படங்களை பகிர்ந்தளிக்கும் தனிப்பட்ட சபைகளுக்கு ஒப்படைப்பதற்கு முன்னர் மூடப்பட்ட 164 திரையரங்குகளில் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படவேண்டிய நிலுவைப் பணம் ரூபா 11,599,690 ஆக இருந்தது. இது தொடர்பாக சட்ட ஆலோசனை எடுக்கப்பட்டு வருவதாக தலைவரினால் 2011 யூலை மாதத்தில் எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

(ii) தற்பொழுது அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்ற சபைகளுக்குரிய 157 திரையரங்குகளிலிருந்து அறவிடப்படவேண்டிய நிலுவைப் பணம் ரூபா 107,272,736 ஆக இருந்தது. அவ்வாறே, 15 திரையரங்குகளுக்கு கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படவேண்டிய பணம் ரூபா 316,783 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட வேண்டிய பணத்தினைச் அறவிடுவதற்கும் செலுத்தவேண்டிய பணத்தினைச் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) உரிய திகதியில் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படாத திரைப்பட வாடகை மற்றும் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு தொடர்பாக கடந்த 5 ஆண்டுகளில் மிகைக்கட்டண வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 15,164,096 தொகை மீளாய்வாண்டு இறுதிவரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(இ) பதவியணிக் கடன்பட்டோர்**

---

சேவையிலிருந்து விலகும் போது பதவியணியினரில் 3 பேருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 134,001 தொகையான இழப்பீட்டுப் பணம் 1997 ஆம் ஆண்டிலிருந்து தீர்த்துவைக்கப்படுவதற்கோ

அல்லது அதனைக் கணக்கீடு செய்து உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.4.2 செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) திரைப்பட வாடகை கடன்கொடுத்தோர்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) திரைப்பட வாடகை கடன்கொடுத்தோர் பட்டோலையின் பிரகாரம் ரூபா 85,375,548 தொகையான செலவு மீதிகளில் ரூபா 14,173,996 தொகை அதாவது 17% ஆனவை 5 ஆண்டுகளுக்கு மேல் பழைமைவாய்ந்தவை என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) திரைப்பட வாடகை கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் ரூபா 68,474,094 தொகையான செலவு மீதிக்கு திரைப்பட வழங்குனர்களுக்காக ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 2,000,000 மீதி சேர்த்துக்கொள்ளப்பட்டு திரைப்பட வாடகை கடன்கொடுத்தோர் பெறுமதியாக ரூபா 70,474,094 தொகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. திரைப்பட வழங்குனர்களுக்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட பெறுமதிக்கு உரிய திரைப்படம் மற்றும் திரைப்பட வழங்குனர்களை அடையாளங் காணக்கூடிய தகவல் எதுவும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏனைய கடன்கொடுத்தோர்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ரூபா 1,795,435 தொகையான நானாவித கடன்கொடுத்தோர்களுக்குள் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,374,191 தொகையான கடன்கொடுத்தோர் மீதி ஒன்று காணப்பட்டதுடன் அதனைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏனைய கடன்கொடுத்தோர்களுக்குள் 2003 இருந்து 2009 திசெம்பர் 31 வரையான காலம் தொடர்பாகச் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணமாக ரூபா 2,805,964 தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தும் கணக்காய்வுக் கட்டணம் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, உரிய உறுதிப்படுத்தல் ஆவணங்கள் கடன்கொடுத்தோரின் மீதியினை உறுதிப்படுத்தாததன் காரணமாக ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்கொடுத்தோரினை ஏடுகளிலிருந்து அகற்றுவதற்கு முடியாதிருந்தது.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

உரிமை கோரப்படாத சம்பளங்கள், பதவியினர் கடன் முற்பணங்கள், கூட்டுத்தாபன பதவியினர் கடன்பட்டோர், சம்பளங்கள் மற்றும் ஏனைய கட்டுப்பாட்டுக் கணக்கு, வழக்கு, தேசிய தொழில் பயிற்சி சபைக்குரிய ரூபா 53,275,403 கூட்டுமொத்த தொகை என்பவற்றுக்கான விபரமான பட்டோலை, காலப்பகுப்பாய்வு, கோவைகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11(ஆ) பிரிவு, 2000 யூன் 12 ஆந் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபம் | ரூபா 45,646,422 பெறுமதியான நிலையான மற்றும் ஏழு நாள் வைப்புக்கள் ஒரு வங்கியில் முதலீடு செய்தமைக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபம்

| | |
|---|---|
| (i) 5.1.3 ஆம் பிரிவு | நாளது வரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் வருடம் ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டிற்கான நாளது வரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் 2011 ஆகஸ்ட் 15 ஆந் திகதிவரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 6.5.1 ஆம் பிரிவு | 2010 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2010 ஆம் ஆண்டிற்கான வரைவு ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 9.2 (ஈ) ஆம் பிரிவு | அமைப்பு வரைபடம் அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) 9.14 ஆம் பிரிவு | நிறுவனத்தின் மனித வளங்கள் தொடர்பாக சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் ஏனைய விடயங்களை உள்ளடக்கும் கையேடு தயாரிக்கப்பட்டு அதற்கு திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஒரு உத்தியோகத்தரின் உச்ச அளவு இடர்கடனுக்கான உரிமை ரூபா 250,000 இற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 5 உத்தியோகத்தர்களுக்கு அந்த உச்ச அளவு இடர் கடன் உரிமைக்கு மிகையாக ரூபா 659,150 தொகை 2010 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் | |
| | 3:17:1 ஆம் பிரிவு | பிரதான கடனாளியின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுகின்ற எந்த உத்தியோகத்தரும் அக்கடனாளியின் பிணையாளராக ஏற்றுக்கொள்ள முடியாது என்று குறிப்பிடப்பட்டிருந்தும் பிணையாளர்கள் தொடர்பாக அது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாத சந்தர்ப்பம் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. |
| | 3:17:3 ஆம் பிரிவு | கடன் தொகையினை செலுத்தி முடிவடைவதற்கு முன்னர் சேவையை முடிவுறுத்துவதற்கு தீர்மானித்துள்ள உத்தியோகத்தர் ஒருவர் பிணையாளராக முன்வந்த சந்தர்ப்பத்தில் அந்த உத்தியோகத்தர் சேவையை முடிவுறுத்துவதற்கு முன்னர் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏனைய பிணையாளர் முன்வருவதாக கடனாளி எழுத்துமூலம் உடன்பாட்டினை வழங்க |

வேண்டிய போதிலும் அவ்வாறான எழுத்துமூல உடன்பாட்டினைச் சமர்ப்பிக்காது சேவையை முடிவுறுத்தும் நிலையிலான வயதைக் கொண்ட உத்தியோகத்தர்கள் பிணையாளிகளாக ஈடுபடுத்தப்பட்டிருந்த இரண்டு சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

| | | |
|---|---|---|
| (i) | நி.பி 104 | 2010 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வாகன விபத்துக்கள் தொடர்பாக நி.பி இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அந்த விபத்தின் காரணமாக கூட்டுத்தாபனம் அடையவேண்டிய நட்டம் ரூபா 54,107 ஆக இருந்ததுடன் அதனை பொறுப்பான நபரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி 188(2) | ஐந்து நடைமுறைக் கணக்குகளுக்குரிய ரூபா 441,150 பெறுமதியான தேறப்படாத 7 காசோலைகள் தொடர்பாக தேறப்படாமைக்கான காரணங்களை விசாரித்து உரிய முயற்சிகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.பி 371 | முற்பணம் ஒன்று வழங்கப்பட்ட செயற்பாடு பூர்த்தியடைந்த உடன் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 1 ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் வரையான கால வீச்சுக்குரிய ரூபா 421,205 தொகையான முற்பணங்கள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஊ) | 2007 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக தனியான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதி மீளாய்வு**

**2.1.1 நிதிசார் விளைவுகள்**

(அ) இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 74,215,602 தொகையான வரிக்கு முன்னைய தேறிய நட்டமாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னைய தேறிய நட்டம் ரூபா 74,079,907 ஆக இருந்ததனால் வரிக்கு முன்னைய தேறிய நட்டத்தில் பாதகமான முரண் ரூபா 135,695 ஆக இருந்தது.

**(ஆ) கடந்த ஆண்டுகளுக்கான நட்டங்களுடன் ஒப்பிடுதல்**

| ஆண்டு | ஆண்டிற்கான வரிக்கு முன்னைய இலாபம் / (நட்டம்) | நட்டம் அதிகரிப்பு / குறைவு | நட்டம் அதிகரிப்பு / (குறைவு) சதவீதமாக |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| 2006 | (51,239,741) | 6,527,555 | 15% |
| 2007 | (57,173,289) | 5,933,548 | 12% |
| 2008 | (57,693,814) | 2,520,525 | 4% |
| 2009 | (74,079,907) | 14,386,093 | 24% |
| 2010 | (74,215,602) | 135,695 | 0.2% |

**(இ) திரண்ட நிதி**

| ஆண்டு | திரண்ட நிதி | அதிகரிப்பு / குறைவு | சதவீதமாக |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| 2006 | (15,917,613) | 2,681,199 | (20.25%) |
| 2007 | (32,544,037) | 16,626,424 | 104% |
| 2008 | 66,101,267 | 98,645,304 | 303% |
| 2009 | 64,955,730 | (1,145,537 | (1.7%) |
| 2010 | 64,146,046 | (809,684) | (1.25%) |

ஒவ்வொரு ஆண்டின் போதும் நட்டம் அதிகரித்துச் செல்லும் போக்கினை சுட்டிக்காட்டியுள்ளதுடன் அக் காரணத்தினால் திரண்ட நிதியம் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது. 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பாதகமான திரண்ட நிதி காணப்பட்டதுடன் 2008 ஆம் ஆண்டின் போது சொத்துக்களின் மீள்மதிப்பீட்டினால் ரூபா 115,153,399 தொகையான இலாபம் ஏற்பட்டதனால் அதன் தாக்கத்தின் அடிப்படையில் திரண்ட நிதியத்தில் ரூபா 66,101,267 தொகையான சாதகமான முன்னேற்றம் ஒன்று ஏற்பட்டிருந்தது. 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் மீண்டும் திரட்டு நிதியத்தில் வீழ்ச்சி ஒன்றினை காணக்கூடியதாக இருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

**(அ) திரைப்படத் தயாரிப்புக் கடன்**

(i) 2010 ஆம் ஆண்டின் போது 05 திரைப்படங்களுக்காக ரூபா 3,685,256 தொகையான கடன்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2010

ஆம் ஆண்டின் போது அதில் ஒரு திரைப்படம் மாத்திரம் திரையிடப்பட்டிருந்தது.

(ii) 2009 ஆம் ஆண்டில் 12 திரைப்படங்களுக்காக ரூபா 19,718,626 தொகையான கடன்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த மீதி ரூபா 12,560,812 ஆக இருந்தது. ரூபா 7,845,494 தொகையான திரைப்படத் தயாரிப்புக் கடன்களைப் பெற்றுக்கொண்ட 07 திரைப்படங்கள் 2010 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் திரையிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திரையரங்குகளுக்காக கடன் வழங்குதல்**

---------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2003 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்துகொள்ளப்படாது ரூபா 1,100,000 தொகை ஒரு திரையரங்கிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 ஏப்ரல் வரையும் இணங்கிக் கொண்ட ஒரு தவணைப் பணமும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தினால் 2002 ஆம் ஆண்டிலிருந்து மீள அறவிடவேண்டியதாக ரூபா 404,719 தொகை காணப்பட்ட ஒரு திரையரங்கிற்கு 2009 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் ரூபா 500,000 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்தும் அப்பணத்தினை மீள அறவிடுதலும் உரிய முறையில் இடம்பெற்றிருக்கவில்லை. இதற்கிணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்திரையரங்குகளிலிருந்து அறவிடப்படவேண்டிய பணம் ரூபா 809,612 ஆகும்.

(iii) 2010 ஆம் ஆண்டிற்கு முன்னர் 05 திரையரங்குகளுக்காக ரூபா 3,748,000 தொகையான கடன்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் அத்திரையரங்குகளிலிருந்து அறவிடவேண்டிய தொகை ரூபா 3,211,907 ஆகும்.

(iv) மீளாய்வாண்டின் போது அமைச்சு அங்கீகாரம் இன்றி திரையரங்கு கடன் தொகை தொடர்பாக வட்டிவீதம் 18½ % இலிருந்து 13% வரை குறைக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2003 ஆம் ஆண்டின் போது ஒரு ஆண்டிற்கு ரூபா 1,010,784 படி செலுத்தி குத்தகை அடிப்படையில் கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தளுகம கன்டராஸ் திரையரங்கின் நிர்வாக நடவடிக்கைகள் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரமின்றி 2008 நவம்பர் 20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தனிப்பட்ட நபர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவருக்கு அத்திரையரங்கின் வருமானத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் 2011 மே 09 ஆந் திகதி வரையும் முறையான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரையரங்கிடமிருந்து கூட்டுத்தாபனத்தினால் அறவிடப்படவேண்டிய தொகை ரூபா 1,690,468 ஆக இருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பரிசோதனைப் பிரிவினால் வெளிப்படுத்தப்பட்ட ஒழுங்கீனங்களுக்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 81,920 பெறுமதியான 36 வரவுத்தாள்கள் வழங்கப்பட்டிருந்தும் 14 வரவுத்தாள்களிலிருந்து ரூபா 45,560 தொகை மாத்திரம் கிடைத்திருந்தது. மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுத்தாபனத்தின் திரையரங்கு மற்றும் கேட்போர்கூடத்தின் நிர்மாணம் மற்றும் உபகரணங்களுக்காக செலவு செய்யப்பட்ட பணம் ரூபா 104,618,634 ஆக இருந்தது. 2010 ஆம் ஆண்டின் போது அவற்றினைப் பயன்படுத்திய சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை 25 ஆக இருந்ததுடன் உழைத்த வருமானம் ரூபா 497,750 மாத்திரமாக இருந்தது. மேற்கூறிய கட்டிடங்களைப் பயன்படுத்திய சந்தர்ப்பங்கள் தொடர்பான முழுமையான

தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் ஏடுகள் கூட்டுத்தாபனத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 29,329,517 பெறுமதியான நிலையான சொத்துக்களின் 14 விடயங்கள் 15 ஆண்டுகளிலிருந்து 26 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2003, 2004, 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகள் தொடர்பாக ரூபா 515,560 பெறுமதியினைக் கொண்ட ஆண்டறிக்கைகளின் 1997 பிரதிகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. உரிய பிரதிகளை தேவையான நபர்களினால் கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 மனிதவள முகாமைத்துவம்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2009 யூன் மாதத்திலிருந்து கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 2011 மே 15 ஆந் திகதி வரையும் அப்பதவியினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இப்பதவி தொடர்பாக இரண்டு வழக்குகள் காணப்படுவதாகவும் அந்த வழக்கு முடியும் வரை ஒரு பொது முகாமையாளரை நியமிக்க முடியாதுள்ளதாகவும் தலைவரினால் எனக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) விண்ணப்பங்கள் கோரப்படாதும் முறையான அனுமதி இன்றியும் 60 வயதிற்கு மேற்பட்ட மூன்று நபர்கள் 2010 யூலை மாத்திலிருந்து ஒப்பந்த அடிப்படையில் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தராக சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 365,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவர்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக மூன்று மாதத்திற்கு ஒரு தரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய

செயல்முன்னேற்ற அறிக்கை கூட்டுத்தாபனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 வாகன குழாம்**

------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக ஒதுக்கப்பட்ட 2 வாகனங்களும் 7 குழாம் வாகனங்களும் காணப்பட்டன. ஒதுக்கப்பட்ட 2 வாகனங்களில் ஒரு வாகனம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதற்காக ஒரு மாதத்திற்கு ரூபா 55,000 படி 4 மாதங்களுக்கு ரூபா 220,000 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 2 வாகன விபத்துக்கள் இடம்பெற்றிருந்ததுடன் இவ்விபத்துக்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 487,426 ஆக இருந்ததுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதி இழப்பீட்டுத்தொகை ரூபா 422,583 ஆக இருந்ததனால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 64,843 ஆக இருந்தது.

**2.2.6 உள்ளகக் கணக்காய்வு**

--------------------------------------

உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவி 2001 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்படுவதனால் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை முறைப்படியாகவும் செயற்திறனாகவும் மேற்கொள்வதற்கும் வினைதிறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்துவதற்கும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு போதியளவு பங்களிப்பினை வழங்கியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**2.2.7 பாதீட்டுக் கட்டுப்பாடு**

----------------------------------

மீளாய்வாண்டிற்கான பாதீடுசெய்யப்பட்ட வருமானம்/ செலவுகளை உள்ளபடியான வருமானம்/ செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது 26 வருமான/ செலவுத் தொகுதிகள் தொடர்பான முரண்கள் 50% இற்கு

மேற்பட்டதாக இருந்ததனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 03. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

--------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(இ) முதலீடு

(ஈ) நிலையான சொத்துக்கள்

(உ) மீளச் செலுத்தவேண்டிய முற்பணம்

(ஊ) வங்கி கணக்கிணக்கங்கள்

(எ) கூட்டிணைந்த திட்டம்

(ஏ) இடர் கடன்

(ஐ) திரையரங்கு மற்றும் கேட்போர் கூடத்தினைப் பயன்படுத்துதல்